**மானியக் கோரிக்கை எண்.17**

1. **கும்பகோணம் மற்றும் திருச்செங்கோடு சரகங்களுக்கென அலுவலக கட்டடம் கட்டுதல்**

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 20 சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

இதில் கும்பகோணம் சரக அலுவலக கட்டுப்பாட்டில் 47 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் திருச்செங்கோடு சரக அலுவலக கட்டுப்பாட்டில் 137 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இந்த இரண்டு சரக அலுவலகங்களும், தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதை கருத்தில் கொண்டு, அரசு அலுவலகங்கள் சொந்த கட்டடத்தில் இயங்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வரசால், கைத்தறித் துறையின் கும்பகோணம் மற்றும் திருச்செங்கோடு சரக அலுவலகங்களுக்கு அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுடன் கூடிய சொந்த கட்டடங்கள் தலா ரூபாய் 1.50 கோடி வீதம் ரூபாய் 3.00 கோடி மதிப்பில் இந்த நிதி ஆண்டில் கட்ட **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

2. **கைத்தறி, பெடல் தறி மற்றும் விசைத்தறி கணக்கெடுப்பு நடத்துதல்**

நெசவுத்தொழிலின் வளர்ச்சிக்கு மாநில அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நல்வாழ்வு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்தொழில் தொடர்புடைய தறிகளின் எண்ணிக்கை, நெசவாளர்களின் குடும்ப எண்ணிக்கை, தறிகளின் தன்மை மற்றும் நிலை, நூல் பயன்படுத்துதல், பல்வேறு வகையான துணிகளின் உற்பத்தி போன்ற புள்ளி விவரங்களை சேகரித்து, ஜவுளித்தொழிலை மேம்படுத்தவும், கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலுக்கான திட்டங்களை சீரான முறையில் திட்டமிடவும், செயலாக்கம் செய்யவும்,

கைத்தறி, பெடல்தறி மற்றும் விசைத்தறி போன்றவைகளின் கணக்கெடுப்பு நடத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, **2014–2015** ஆம் ஆண்டில் கைத்தறி, பெடல்தறி மற்றும் விசைத்தறி கணக்கெடுப்பு ரூபாய் **50/–** இலட்சம் செலவில் மேற்கொள்ள **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**3. விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்துதல்**

கைத்தறி நெசவாளர்களின் உடல் நலத்தை பாதுகாக்கும் நோக்கில், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கைத்தறி நெசவாளர்களின் உடல் நலத்தைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மத்திய அரசு **"ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா"** எனும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும் அத்திட்டம் செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விசைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மேற்கூறிய **"ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா"** திட்டம் தமிழகத்திலுள்ள விசைத்தறி நெசவாளர்களுக்கும் விரிவுபடுத்தி செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு விசைத்தறி நெசவாளர் குடும்பத்தில் நெசவாளர் உட்பட ஐந்து நபர்கள் ஆண்டொன்றுக்கு ரூபாய் **37,500/–** வரை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மருத்துவ உதவிகள் பெற்றுக்கொள்ளலாம். இத்திட்டத்தின் கீழ் **2014–2015** ஆம் ஆண்டு நிதியாண்டில் **16,000** நெசவாளர்கள் பயனடையும் வகையில் மாநில அரசின் பங்காக ரூபாய் **29.60** இலட்சம் ஒதுக்கீடு செய்ய **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**4. ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி அளித்தல்**

ஜவுளித் துறையின் முன்னேற்றத்தினை கருத்தில் கொண்டும், ஜவுளி மற்றும் அதன் தொடர்புடைய பிரிவுகளில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் மற்றும் நன்னோக்காளர்கள் (Stakeholders) திறனை மேம்படுத்தும் பொருட்டும், மத்திய அரசு ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் **2014–2015–**ஆம் ஆண்டில் கைத்தறி நெசவு, பெடல் தறி நெசவு, சாயம் தோய்த்தல், வடிவமைப்பு, துணியின் மீதான அலங்கார வேலைப்பாடு, விற்பனை பயிற்சி, விற்பனை மேலாண்மை பயிற்சி, நூற்பு பயிற்சி, விசைத்தறி நெசவு போன்ற பிரிவுகளில் **1640** நபர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். இதற்கென மாநில அரசின் பங்காக ரூபாய் **54.53** இலட்சம் ஒப்பளிப்பு செய்ய **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**5. ஐந்து பெருநகரங்களில் கைத்தறி கண்காட்சி நடத்துதல்**

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள பாரம்பரியமிக்க கைத்தறி இரகங்களை, மக்களிடையே குறிப்பாக இளம் தலைமுறையினரிடையே பிரபலபடுத்தவும், அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி விற்பனையை அதிகரித்து இருப்பினை குறைக்கவும் 2014-2015ஆம் ஆண்டில் ஐந்து பெருநகரங்களில் தலா ரூபாய் 8 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 40 இலட்சம் செலவில் கைத்தறி கண்காட்சிகள் நடத்த **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**6. நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் ஊதிய விகிதத்தை திருத்தி அமைக்க குழு அமைத்தல்**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான திருத்தப்பட்ட ஊதிய விகிதம் மற்றும் நடைமுறையிலுள்ள ஊதிய விகிதங்களில் உள்ள குறைகளை களையவும், ஊதியத்தை உயர்த்தி வழங்கவும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் கோரி வருகின்றனர். நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடு, வளர்ச்சி, அங்கு பணிபுரியும் பணியாளர்களின் ஈடுபாடு, திறன் சார்ந்துள்ளது. அவ்வகையில் பணியாளர்களை ஊக்குவித்து, செவ்வனே பணியில் ஈடுபடும் விதமாக, அவர்களின் ஊதிய விகிதத்தினை திருத்தியமைப்பது குறித்து ஆராய ஒரு குழு அமைக்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**7. கைத்தறி நெசவாளர்களுக்கு 10 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு வழங்குதல்**

தமிழ்நாட்டில் உள்ள 1161 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 2.75 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தற்போது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு 01.09.2014 முதல் 10 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு வழங்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**8. நெசவுக்கு முந்தைய பணிகளுக்குத் தனியாகக் கூலி வழங்குதல்**

கைத்தறித் துணிகளை தறியில் நெசவு மேற்கொள்வதற்கு முன்னர், பாவு ஓடுதல், கஞ்சி தோய்த்தல், பாவு ஏற்றுதல் மற்றும் ஊடைநூல் சுற்றுதல் ஆகிய நெசவுக்கு முந்தைய பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. விலையில்லா வேட்டி சேலைகள் திட்டம் மற்றும் விலையில்லா பள்ளி சீருடைத் திட்டம் ஆகிய அரசு திட்டங்களின் உற்பத்தியில்

ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலியை தனியே வழங்க அரசு ஏற்கனவே அனுமதித்துள்ளது. சேலைகள், லுங்கிகள், துண்டுகள் போன்ற இதர இரக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கும் பாவு ஓடுதல், கஞ்சி தோய்த்தல் பாவு ஏற்றுதல் மற்றும் ஊடைநூல் சுற்றுதல் போன்ற நெசவுக்கு முந்தைய பணிகளுக்காகத் தனியாகக் கூலி வழங்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**9 கைத்தறி நெசவாளர்களுக்கான முதியோர் ஓய்வூதியம் மற்றும் நெசவாளர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியத்தை ஒப்பளிப்பு செய்யும் அதிகாரம் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு வழங்குதல்.**

கைத்தறி நெசவாளர்களின் நீண்டகால கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதிய தொகையினை உரிய காலத்தே ஒப்பளிப்பு செய்யும் நோக்குடன், கூட்டுறவின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் முதியோர் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதிய தொகையினை வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு உட்பட்டு மாதந்தோறும் ஒப்பளிப்பு செய்யும் அதிகாரத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு வழங்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**10 கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இலவச போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தருதல்**

தற்போது அண்ணா கூட்டுறவு நூற்பாலை ஆண்டிபட்டி, பாரதி கூட்டுறவு நூற்பாலை எட்டையபுரம், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி, புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட

கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை ஆகிய 5 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் வருகையினை ஊக்குவிக்கவும், குறித்த நேரத்தில் பணிக்கு வருவதை உறுதி செய்யவும், இலவச போக்குவரத்து வசதி ஏற்படுத்தி தர **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 11 கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல்

கோ–ஆப்டெக்ஸ் வாடிக்கையாளர்களின் வசதியை அதிகப்படுத்தும் நோக்குடன் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களை மேம்படுத்தி, இதன் மூலம் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தி, விற்பனையை மேலும் அதிகரிக்கும் விதமாக திருநெல்வேலி மண்டலத்தில் உள்ள காந்திமதி, தக்கலை, பாளையங்கோட்டை, கடலூர் மண்டலத்தில் உள்ள முல்லை, பாண்டிச்சேரி மற்றும் கோயம்புத்தூர் மண்டலத்தில் உள்ள ஸ்ரீ பால முருகன் ஆகிய விற்பனை நிலையங்களை ரூபாய் 170 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்த **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 12 கோ–ஆப்டெக்ஸில் மின்னணு வணிக விற்பனை (On-line shopping) முறையை அறிமுகப்படுத்துதல்

துணிவகை வணிகம் கணினிமயம் மற்றும் மின்னணு வணிகமயமாகி வருகின்றது. இதனால் வாடிக்கையாளர்களின் நேரம், சக்தி ஆகியவைகள் சேமிக்கப்படுவதுடன் விற்பனையும் அதிகரிக்கின்றது. இந்நிலையினை கருத்தில் கொண்டு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனையை அதிகரிக்கவும், உள்நாட்டு, வெளிநாட்டு

வாடிக்கையாளர்களின் வசதியினை மேம்படுத்தவும், கோ–ஆப்டெக்ஸில் மின்னணு வணிக முறையை அறிமுகப்படுத்த **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**